# இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் அருட்பணி விரிவாக்கத் திட்டம்

பல நூறாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே! இன்றைய மண்ணுலகப் பரப்புகளில் பல தோன்றும் முன்னரே! இமயமலையும் வட இந்தியாவும் தோன்றுவதற்கு முன்னரே! விலங்குகளோடு விலங்குகளாக வாழ்ந்த மனிதன் அகப் பண்பாட்டையும் புறநாகரீகத்தையும் பெறுவதற்கு முன்னரே! இளமுறியாக் கண்டத்தில் [குமரிக் கண்டம்] பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும், நாற்பத்தெட்டு வகைப்பட்ட சித்தர்களும் ஒன்று கூடி ஆய்வுகள் நிகழ்த்தி இம்மண்ணின் ஈசர்களுக்கு 'மணீசர்கள்' → 'மணிசர்கள்' ஏற்ப உருவாக்கிய மதமே 'இந்து மதம்'.

மணிசர்கள் அருள் அணுக்களைத் தங்களுக்குள் கருவாக்கி உருவாக்கிடும் பத்தி நிலைகள், சத்தி நிலைகள், சித்தி நிலைகள், முத்தி நிலைகள் முறையாகவும் நிறையாகவும் வகுக்கப்பட்ட மதமே இந்து மதம். இம்மண்ணுலகோடு நிலையாக இந்துமதச் செயலகங்கள் என்றென்றும் இருக்கும் வண்ணமே ஆயிரத்தெட்டு சிவாலயங்களும், இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடங்களும், நூற்றெட்டுத் திருப்பதிகளும், தொண்ணூற்றாறுவகை வழிபடு நிலையங்களும் உருவாக்கப்பட்டன. இவற்றின் திருவாக இறை, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், தேவர், தேவதை, அமரர், இருடி, ... கணபாடிகள் எனப்படும் நாற்பத்தெட்டு வகையினர் தோன்றி வளர்ந்து வாழ்ந்திடும் வழிவகைகள் அனைத்தும் மிக மிகத் தெளிவாக வகுத்தளிக்கப் பட்டிருக்கின்றன பதினெண்சித்தர்களால்.

இன்றைய குருமகா சன்னிதானம் ஞானகுரு ஞானத்தந்தை, அரசயோகி, இந்துமதத் தந்தை, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரார் அவர்கள் தமது அருட் செயலகமாக, இந்து மறுமலர்ச்சி இயக்க அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைமைச் செயலகமாக சித்தர்நெறிக் குருகுலம், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம், அருள்மிகு வெட்டவெளிக் கருவறைகள் கொண்ட சனீசுவரர் தேவாலயம், நவக்கிரக் பரிகார யாகசாலைக் கோயில் ... முதலிய அருளூற்றுக்களை மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டி அருகில் திண்டுக்கல் சாலையில் அமைந்துள்ள சித்தர் மாநகரில் நிறுவியுள்ளார். இங்கு ஒவ்வொரு முழுநிலவு இரவில் பருவ பூசையும்; அமாவாசைப் பகலில் வேள்வியும் நடைபெறுகிறது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் மக்களின் வாழ்வியல் கோளாறுகளான கோள்கள், இராசிகள், மீன்கள் முதலியவைகளின் பாதிப்புகள்; சாபம், கண்ணேறு ... முதலிய தொல்லைகள்; செவ்வாய் தோசம், நாக தோசம், சென்மச்சனி ... முதலிய பாதிப்புகள் நலிவுறுத்தும் நோய்கள், மனிதர்களைப் பிடித்தாட்டும் பேய், பிசாசு, ஆவிகள், ஊழ்வினை, விதி, மதி, மானுட முயற்சி ... முதலிய அனைத்தையும் செம்மைப் படுத்தி அகவாழ்வையும், புறவாழ்வையும் நலப்படுத்தும் பணி கடந்த பத்து ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இங்கே ஆயகலைகள் அறுபத்து நான்கு, அருட்கலைகள் நாற்பத்தெட்டு, தெய்வீகக் கலைகள் ஒன்பது, பேய்க்கலைகள் ஒன்பது, நோய்க்கலைகள் ஒன்பது, தேய் கலைகள் ஒன்பது... முதலிய கலை நிலைகள் கற்றுத் தரப்படுகின்றன. குண்டலினி உணரல், தன்னையறிதல், பழம்பிறப்பு உணரல், வாழ்க்கை நிலையறிதல், மந்திர எந்திர தாந்தரீகத் தகடு பெறல் முதலியவற்றிற்கும் அருள் வாய்ப்புண்டு. இவற்றால், தனிமனித வாழ்வும், குடும்ப வாழ்வும், சமுதாய வாழ்வும், அரசியல் வாழ்வும், ... ஒழுங்குபட்டு, முழுமைப்பட்டு நிறைவடைந்திடும். எனவே, விருப்பாற்றலும், உழைப்பாற்றலும் உடைய பத்தர்கள் அனைவரும் வருக! வருக!! வருக!!!

ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் 4 - 6 மணியளவில் மதுரை நகர், செல்லூர் அருள்தாசுபுரத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஐயனார் திருக்கோயில் முன்பாக பஞ்சாக்கினி யாகம் வளர்க்கப்பட்டு மேலே கண்ட அனைத்துக் குறைகளுக்கும் பரிகாரங்கள் செய்யப்படுகின்றன. அனைவரும் நலம் பெற வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

## பதினெண்சித்தர்களின் அறிவுக்கொடை

1. மனிதர்களுக்கு முற்பிறவிகள், மறுபிறவிகள் உண்டு.
2. பிறவாமை, இறவாமை, காயகல்ப சித்திகள் பெற முடியும்
3. ஆவி, ஆன்மா, உயிர் என்ற மூன்று உண்டு.
4. (பசு) உயிர், (பதி) இறை, (பாசம்) தளை என்ற மூன்றே இந்து மதத்தின் அடிப்படை.
5. இம்மண்ணுலகின் இயக்கமும், இம்மண்ணுலகப் பயிரின உயிரின வாழ்வியல்களும் விண்ணிலுள்ள நாள்கள், கோள்கள், இராசிகள், மீன்கள் ... முதலியவற்றின் இயக்கப்படிதான் நிகழுகின்றன.
6. சூரியனிலிருந்து உடைந்து பிரிந்து வந்த நெருப்புக் கோளம்தான் படிப்படியாகப் பனிக்கோளமாக, நீர்க்கோளமாக இருந்து... கல்லும் மண்ணும் தோன்றிப் பின்னர் பயிரினங்களும் உயிரினங்களும் தோன்றி இன்றைய உலகாயிற்று.
7. உடல் தோன்றுவதற்கு முன்னரே உயிர்கள் தோன்றி உலவி வாழுகின்றன (அருவங்கள்). இவையே கருவறை புகுந்து உருவங்களாகின்றன. இதுவே அருவ நிலைகள், உருவ நிலைகள், அருவுருவ நிலைகள் எனப்படுகின்றன.
8. ஆணும், பெண்ணும் சமமே. ஆணை விடப் பெண் அருட்சத்தி பெறும் ஆற்றலையும், தரத்தையும், தீரத்தையும் மிகுதியாகவே பெற்றிருக்கிறாள். பெண்ணையே சத்தியாக வழிபடுவது தான் தந்தர, தாந்தர, தாந்தரீக, தந்திற, தாந்திறப் பூசை முறைகள். சத்தியே அனைத்துக்கும் மூலமானவள், மேலானவள், தலைமையானவள்.
9. பெண் திங்கள் தோறும் மலரும் மலர். அவளைத் தீட்டு என்றோ! விதவை என்றோ! விலக்கி வைப்பது விவேகமற்ற செயல்; தெய்வ விரோதச் செயல்.
10. இம்மண்ணுலகும், பயிரினங்களும், உயிரினங்களும் இயற்கையே. இவற்றின் வடிவிலும், வாழ்விலும் இறைமை அணுக்கள் ஊற்றெடுக்கின்றன. அவற்றைக் குருவழி அறிந்து செயல்படுபவர் திருநிலைகளைப் பெறலாம்.
11. வாழ்ந்த மனிதர்களே இறை, கடவுள், தெய்வம், ஆண்டவர், பட்டவர், தேவர், தேவியர், அமரர், வானவர், ... இருடி, முனிவர், கணபாடி என்று நாற்பத்தெட்டுத் திருநிலைகளைப் பெறுகின்றனர்.
12. ஒரே கடவுள் என்ற கருத்துத் தவறானது. உலகில் தோன்றும் அருளாளர் எல்லோருமே அவரவர் அநுபவத்துக்கேற்ப ஒரு கடவுளைப் பற்றிய உண்மையைக் கூறிச் சென்றுள்ளனர் என்பதால் கடவுள்கள் பலர் உண்டு என்ற பேருண்மை விளங்குகிறது.
13. எல்லா வழிபாட்டு நிலையங்களும், வழிபாட்டு முறைகளும், மறைகளும், நெறிகளும், வேதங்களும், நாதங்களும், போதங்களும், ஓதங்களும், சித்தங்களும், தவங்களும் ... மனிதரைத் தூய்மைப் படுத்தி உய்வு பெறச் செய்வனவே. அதனால் உலக ஆன்ம நேய ஒருமைப் பாட்டுக்கு உலகை அழைத்துச் செல்லுவது அனைத்துக்கும் மூலமான, முதலான, தாயான சித்தர் நெறியெனும் இந்து மதமே.

14. அனைவரும் எல்லா உரிமைகளையும் பெற்றுப் பெருமையோடு பண்பாடும், நாகரீகமும் பேணி வாழும் வாழ்வைப் பதினெண்சித்தர்கள் படைத்த இந்து மதமே செயலாக்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றது.

15. மனிதனை மனிதன் அடிமைப்படுத்துவதோ, சுரண்டுவதோ, ஏமாற்றுவதோ தவறு! தவறு!! தவறு!!!

16. மொழி, இனம், நாடு, மதம், சாதி ... என்பவை மானுட அமைதியையோ! நிறைவையோ! நிம்மதியையோ! ஒற்றுமையையோ! மகிழ்ச்சியையோ! பாதுகாப்பையோ! நலிவடையச் செய்துவிடக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது!

17. சமத்துவச் சகோதரத்தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கப் பாடுபடுவதே பதினெண் சித்தர்களின் தத்துவ நோக்கமாகும்.

18. மனித வாழ்வுக்குரிய அன்பு, பாசம், பற்று, கனிவு, காதல், இனிமை, உறவு, (குடும்ப வாழ்வு) இல்லறம், கடமை, வீரம், நன்றி, கட்டுப்பாடு, ஒற்றுமை, நட்பு, சமாதானம் ... முதலிய மென்மைப் பண்புகளின் விதைப்பண்ணையே பதினெண் சித்தர்கள் படைத்த இந்து மதம். அதனால் தான் 'இந்து மறுமலர்ச்சி பெற்ற போதுதான் பிற்காலச் சோழப் பேரரசு (785-1279) அருளாட்சி நிகழ்த்தப் பிறந்தது' என்ற இப்பேருண்மையை உணர்ந்து செயல்பட வேண்டும்.

--- இந்து மதத்தந்தை, குருமகா சன்னிதானம்
பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி
ஞாலகுரு சித்தர் கருவூரார்.

# பதினெண்சித்தர்களின் அருட்கொடை

"தமிழில்தான் இந்து மதம் உருவாக்கப்பட்டது" என்ற பேருண்மையை விளக்கும் சான்றுகளும், ஊன்றுகளுமே பதினென்சித்தர்களின் அருட்கொடைப் பட்டியல். [விரிவஞ்சி நினைவிலுள்ளவற்றின் சுருக்கப் பட்டியலே கீழே தரப் பட்டுள்ளது]. இந்துமதத்தைத் தெரிய, புரிய, கடைப்பிடிக்க உதவுவன... ...

1. நான்மறைகள், நான் முறைகள், நானெறிகள், நான் வேதங்கள். [நான் வேதம் :- இருடிவேதம் (இருக்கு வேதம்), அசுர வேதம் (யசுர் வேதம்), யாம வேதம் (சாம வேதம்), அதர்வான வேதம் (அதர்வண வேதம்)].
2. மூன்று நேமங்கள், மூன்று நியமங்கள், மூன்று நிடதங்கள், மூன்று நிட்டைகள். (நேமங்கள், இணை நேமங்கள், துணை நேமங்கள் ... ... ...)
3. வேதங்கள், நாதங்கள், போதங்கள், ஓதங்கள், சித்தங்கள்.
4. மோகங்கள், யோகங்கள், போகங்கள், தாகங்கள், வேகங்கள்.
5. ஒன்பது கடவுட் கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள், ஒன்பது பேய்க் கலைகள், ஒன்பது நோய்க் கலைகள், ஒன்பது தேய் கலைகள்.
6. பதினெட்டு ஆகமங்கள், பதினெட்டு மீமாம்சைகள், பதினெட்டுப் புராணங்கள், பதினெட்டுத் திருமந்திறங்கள், பதினெட்டு மாலைகள்.
7. ஐந்திறங்கள், ஐந்திரங்கள், ஐந்தரங்கள்.
8. எந்திறங்கள், எந்திரங்கள், எந்தரங்கள், எந்தறங்கள், ஏந்தரங்கள், ஏந்தரீகங்கள்.
9. மந்திறங்கள், மந்திரங்கள், மந்தரங்கள், மாந்தரங்கள், மாந்தரீகங்கள்.
10. தந்திறங்கள், தந்திரங்கள், தந்தரங்கள், தாந்தரங்கள், தாந்தரீகங்கள்.
11. சித்தங்கள், தவங்கள், பூசைகள், ஞானங்கள், மோனங்கள்
12. ஓமங்கள், ஓகங்கள், யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள்.
13. அத்திறங்கள், சாத்திறங்கள், தோத்திறங்கள், நேத்திறங்கள், அத்திரங்கள், சாத்திரங்கள், தோத்திரங்கள், நேத்திரங்கள், அத்தரங்கள், சாத்தரங்கள், தோத்தரங்கள், நேத்தரங்கள்.
14. கருவாக்கு, கருவாசகம்; குருவாக்கு, குருவாசகம்; தருவாக்கு, தருவாசகம்; திருவாக்கு, திருவாசகம்; அருள்வாக்கு, அருள்வாசகம், மருள்வாக்கு, மருள்வாசகம்;
15. சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்திரங்கள் (என்பவை 'சூக்தங்கள்' எனச் சமசுக்கிருதத்தில் சித்தர்களால் எழுதப்பட்டவை).
16. சுருதிகள் (என்பவை 'ஸ்மிருதிகள், என்று சமசுக்கிருதத்தில் சித்தர்களால் எழுதப்பட்டவை).
17. நவ நாதங்கள், நவ போதங்கள், நவ ஓதங்கள், நவ வேதங்கள் --- என்றோர் தொகுப்பு பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியால் குறிக்கப்படுகிறது.
18. அருட்கலைகள் நாற்பத்தெட்டு.
19. ஆயகலைகள் அறுபத்துநான்கு.
20. நூற்றெட்டுத் திருப்பதிச் சக்கரங்கள், ஏந்தரங்கள், தாந்தரீகத் தகடுகள்.
21. இருநூற்று நாற்பத்து மூன்று சத்தி பீடச்சக்கரங்கள், ஏந்தரங்கள், தாந்தரீகத் தகடுகள்.
22. ஆயிரத்தெட்டுச் சிவாலயச் சக்கரங்கள், ஏந்தரங்கள், தாந்தரீகத் தகடுகள்.
23. நாற்பத்தெட்டு வகையான வழிபடு நிலையினர், நாற்பத்தெட்டு வகையான வழிபாட்டு நிலையங்கள், நாற்பத்தெட்டு வகையான அருட்பட்ட அருளாளர்கள், நாற்பத்தெட்டு வகையான --- (அ) பத்தி நிலைகள், (ஆ) சத்தி நிலைகள், (இ) சித்தி நிலைகள், (ஈ) முத்தி நிலைகள்

இவைகளையெல்லாம் முழுமையான நூல்களாக வடிக்கத் தமிழ் அரியணையில் அமர வேண்டும். தமிழ் வளவளர்ச்சித் திட்டமே ஆட்சி நோக்கமாதல் வேண்டும், தமிழே தெய்வம் என உணர்வதே இந்துமத மறுமலர்ச்சி.

## முதலாம் செயற்குழு மாநாட்டில் (25/12/1983 / மதுரை) நிறைவேற்றப்பட்ட கோள்வட்டச் செயல் திட்டங்கள் (ஒன்பது)

1. விஞக்களைக் கேட்க விரும்புகிறவர்கள் 22-12.1983க்குள் குருதேவருக்கோ, வீரமாகாளி சன்னிதானத்துக்கோ விஞக்களை எழுத்து மூலம் அனுப்ப வேண்டும். இவற்றிற்கு மட்டுமே 25-12-1983இல் நடக்கும் செயற்குழு கருத்து விளக்க விவாத மன்றம் பதில் வழங்கும்.
2. அருட்பட்டம் பெற்றவர்கள் மட்டுமே அனுமதிக்கப் படுவர். இது 'கருவறை', 'உலைக்களம்', -- -- புரிந்தும் புரியவைத்தும் உரியவர்களை மட்டும் அழைத்து வருக!
3. குறைந்தது ஐந்து நபர்கள் ஒன்று சேர்ந்தால்தான் ஓர் அமைப்பை மன்றம், கழகம், குழு, சங்கம், சபை -- -- -- என்ற பெயரில் அமைக்கலாம். இது இ.ம.இ., அ.வி.தி. இரண்டின் சட்டதிட்ட கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டே என்றென்றும் செயல்படும் --- என்ற உறுதிமொழிப் பத்திரம் எழுதிக் கொடுத்து வட்டம், மாவட்டம், மாநிலம் என்ற மூன்று செயலகங்களிலும் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
4. 17 பேர்கள் ஒன்று சேர்ந்தால்தான் இ.ம.இ.யின் கிளை அலுவலகம் அமைக்கலாம். இதையும் வட்டம், மாவட்டம், மாநிலச் செயலகங்களில் முறைப்படி பதிவு செய்து கொள்ள வேண்டும். ஓரே தெருவில் கூட இரண்டு மூன்று கிளை அமைப்புக்கள் அமைக்கலாம்.
5. அ.வி.தி. நிலையம் ஒரே ஓர் அருளாளர் அருட்பட்டங்கள் பெற்ற சன்னிதானமாக இருந்தாலும் அமைக்கலாம். (அ) ஞானக்கொடிகளில் இரண்டு ஒரே கொடி மரத்தில் ஏற்றப்படல் வேண்டும். யாகசாலை ஒரே ஓர் யாககுண்டமாவது அ.வி.தி. தலைமைச் செயலாளர், பரமாச்சாரியார், அருள்மிகு வீரமாகாளி சன்னிதானம் நெ.சேவுகன், இ.ம.இ., அ.வி.தி. தலைமைப் பொறுப்பாளர், பிறமாச்சாரியார் அருள்மிகு அங்காள பரமேசுவரி சன்னிதானம் சி.கவிக்குமார் B.Sc., ஆகிய இருவரில் ஒருவராவது நேரில் வந்து சக்கரம், தகடு, ஏந்தரம் -- -- -- முதலியவை வைத்துத்தான்; கட்டப்பட்டு அ.வி.தி. நிலையம் துவக்கப்படல் வேண்டும். இந்தக் கிளை அமைப்பு முறைப்படி காரியேந்தல்பட்டித் தலைமைச் செயலகத்திலும், பொன்னேரி தலைமைப்பொறுப்பாளரின் அலுவலகத்திலும் பதிவு செய்யப்படல் வேண்டும். உறுதிமொழிப் பத்திரம் எழுதித் தரல் வேண்டும்.
6. பொதுவான உறுதிமொழிப் பத்திரம் விரைவில் அச்சிடப்படல் வேண்டும். இ.ம.இ. உறுப்பினர், அ.வி.தி. அருளாளர், இ.ம.இ. கிளை ... முதலிய நிறுவனங்களின் உறுதிமொழிப் பத்திரம் ஒரே மாதிரியா? அல்லது தனித்தனியா? விவாதிக்க வேண்டும்.

   (அ) கிளை அலுவலகப் பதிவு அட்டை, உறுப்பினர் சந்தா இரசீது, நன்கொடைப் புத்தகம் அச்சிடல் வேண்டும்.
7. முழுநேர ஊழியர்களைத் தேர்ந்தெடுத்தல், ஊதியம் வழங்குதல்.
8. அ.வி.தி. வருமானம்; இ.ம.இ. வருமானம் முறைப்படுத்துதல்.
9. நாம் அச்சடித்த உறுப்பினர் பதிவேட்டைப் பயன்படுத்தும் முன்பாக, அனைத்துச் சன்னிதானங்களும் ஆங்காங்கே சந்திக்கின்ற அ.வி.தி. ஆர்வலர்களை உறுப்பினர்களாக்கிடல் வேண்டும். அதற்காக கார்பன் பேப்பர் வைத்து 1+1 நகலில் புதிய உறுப்பினர்களின் பெயர், வயது, முகவரி, கையெழுத்து இவற்றை வரிசையாக முறையாக தயாரித்து அ.வி.தி.யின் மாவட்ட மையத்திற்கு அனுப்ப வேண்டும். ஒரு

நகல் இ.ம.இ. தலைமையகத்துக்கு அனுப்பிடல் வேண்டும். சன்னிதானங்கள் தங்கள் வசம் நோட்டுப் புத்தகச் சுவடி ஒன்றில் (Ledger) தொடர்ந்து குறித்து வர வேண்டும். இவ்வாறு கிராமத்துக்கு ஓர் அமைப்பாகக் குறைந்தது மூவாயிரம், நாலாயிரம் அமைப்புக்களை விரைந்து உருவாக்க வேண்டும். மேற்படி இடங்களில் வாரம் ஒரு நாளிலாவது அருள் வழங்கப்படல் வேண்டும்.

---

## இராசி வட்டத் தீர்மானங்கள் (பன்னிரண்டு)

1. ஆத்திகர்கள்தான் நாடாள வேண்டும்
2. இந்துமதம் இந்திய அரசின் மதமாக அறிவிக்கப்படல் வேண்டும்
3. சிறு பான்மை மதத்துக்கென்று தனிப்பட்டச் சலுகைகள் தருவது போல் இந்துமதத்துக்கும் தர வேண்டும்.
4. கோயில் சொத்துக்களுக்கு வரிவிதித்தலோ, நிலையங்களுக்கு வரி விதித்தலோ கூடாது.

   (அ) இந்துக் கோயில்கள் அனைத்தும் காலை முதல் இரவு வரை அடைப்பின்றித் திறந்திருக்க வேண்டும்.
5. கோயில் வருமானங்களை மற்ற கோயில்களைப் புதுப்பிக்கவும், அன்றாடம் ஆறுகாலப் பூசைகளும், முறையாக அனைத்துத் திருவிழாக்களும் நிகழ்த்தத்தான் செலவிடல் வேண்டும். கலைஞர்களுக்குப் பொருள் வழங்குதல்; மதக் கலைகளைக் கற்பிக்கும் நிறுவனங்களை நடத்துதல் முதலியவற்றிற்கு மட்டுமே கோயில் வருமானங்களைச் செலவு செய்ய வேண்டும்.

   (அ) இந்து அறநிலையத் துறையின் கீழாக அனைத்துக் கோயில்களிலும் தமிழ் மந்திறங்களில் பயிற்சி பெற்ற பூசாறிகளையே நியமிக்க வேண்டும். இவர்களுடைய ஊதியத்தை இந்து அறநிலையத் துறையே ஏற்க வேண்டும்.
6. கோயில் நிர்வாகங்களில் ஆத்திகர்கள்தான் அதிகாரிகளாக இருக்க வேண்டும்.
7. இந்துமதம், பல்கலைக்கழகப் பட்டப் படிப்பாக்கப் படல் வேண்டும். இதில் பட்டம் பெற்றவர்களே மதத்துறை அலுவலகங்களில் பணியாற்ற வேண்டும்.
8. இந்துமதக் கோயில்கள், இன்று சீக்கியர்களின் பொற்கோயில்கள் எப்படி அன்னியரோ!, மத்திய அரசோ! நுழைய முடியாத வலுவான கோட்டையாக இருக்கிறதோ அப்படி உருவாக்கப்படல் வேண்டும்.
9. உலகிலேயே சித்து விளையாடல் புரியும் அருளாளர்கள் இந்து மதத்தில்தான் நிறையப் பேர் எப்போதும் எங்கும் வாழ்கின்றனர். இவர்கள் ஒன்றுபடல் வேண்டும்.
10. இந்து மதத்தின் பெயரால் உள்ள அனைத்துக் கட்சிகளும் ஒருங்கிணைந்து ஒற்றுமைப்பட்டு ஒன்றாகிச் செயல்படல் வேண்டும்.
11. எந்த மதத்தோடும் வேற்றுமையோ, பகையோ, பொறாமையோ, போட்டியோ, போராட்டமோ கூடாது! கூடாது!! கூடாது!!! கூடாவே கூடாது!
12. இந்துக்களை இந்துமதத்தைத் தெரிந்தும் புரிந்தும் வாழுமாறு செய்ய வேண்டும். இந்துக்களை இந்துமத அறிவு, நம்பிக்கை, பற்று, பாசம், மதிப்பு, பெருமை, உரிமை ... உணர்வுகளோடு வாழுமாறு செய்ய வேண்டும்.

---

## பதினெண் சித்தர்களின் அறிவுக் கொடை (முன்னுரை)

மிக மிகத் தொன்மையான காலம் என்று எதையும் கூறமுடியாதபடி காலக் கணக்கீட்டு அடிப்படையில் பேரண்டங்கள், அண்டங்கள், மீன்கள், கோள்கள், இராசிகள், இந்த மண்ணுலகப் பிண்டங்கள்... அனைத்துக்கும் வரலாறு எழுதியுள்ளார்கள் பதினெண் சித்தர்கள். மிகச் சிறந்த வரலாற்றுப் பேராசிரியர்களாக, மேதைகளாக, தந்தைகளாகப் பதினெண் சித்தர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

1. **குருபாரம்பரியம் (மத வரலாறு)** Religious History
2. **இலக்கிய பாரம்பரியம் (இலக்கிய வரலாறு)** History of Language & Literature
3. **அரச பாரம்பரியம் (அரசியல் வரலாறு)** Political History

என்ற மூன்று மாபெரும் இலக்கியத்துறை நூல்களைத் தொடர்ந்து எழுதும் மரபைப் பதினெண் சித்தர்கள் கையாண்டு வருகிறார்கள்.

---

### வணக்கவுரை

பதினெண் சித்தர்கள் இம்மண்ணுலகுக்கு வழங்கிய வாழ்வியல் நெறிகள், அருட்துறை முறைகள், கலை வடிவங்கள், இலக்கியத் தொகுப்புக்கள், அறிவியல் முடிவுகள், ஆராய்ச்சி உண்மைகள்...... இவைகள் நேரடியாக மக்களைச் சென்றடைவதின் மூலமே சமத்துவ சகோதரத்தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயத்தையும், உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டையும் உருவாக்க முடியும். பதினெண்சித்தர்களின் சமுதாயக் கொள்கைகளும், பொருளாதாரச் சிந்தனைகளும், அருளுலகப் பயிற்சிகளும் மீண்டும் மனித சமுதாயத்தில் கற்பிக்கப்படுவதின் மூலம்தான் இந்திய மக்களின் - உலக மக்களின் அமைதியற்றப் போக்குக்கு, ஆர்வமற்ற வறட்டு வாழ்க்கைக்கு வளமூட்ட முடியும்.

தெய்வீக உண்மைகளை உட்கொண்ட 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' சித்தர்களின் விந்து வழி வாரிசான 'சித்தர் கருவூரார்' வழிவந்த சித்தர் ஏளனம்பட்டியாரால் கி.பி.1772இல் சிறு அமைப்பாக தோற்றுவிக்கப்பட்டது. இவ்வமைப்பு இலைமறை காயாகவே வளர்ந்து வந்தால் இ.ம.இ.யின் நேரடியான சமத்துவ நன்மைகளை எல்லோரும் பெரும் வாய்ப்பினை இழந்தனர். எனவேதான், குருதேவர் தம் காலத்தில் உலகியலுக்கேற்ப பொதுமைப்படுத்த விரும்பி இதனை இயக்கமாக மாற்றினார். இதன் மூலம் மனித சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அரசுப் பதிவுக்குரியதாக்கினார். நமது இயக்கம் மனித சமுதாயம் இழந்து போன பண்பாட்டினை மீட்டுத் தரும் ஓர் இயக்கம், முழுக்க முழுக்கப் பண்பாட்டு இயக்கம். நமது நோக்கம், தமிழ்மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு உரிமையோடும், பெருமையோடும் செழிக்கப் பாடுபடுவதோடு இந்தியாவின் மற்றைய இனங்களும், மொழிகளும், நாடுகளும் தத்தம் அளவில் தன்னுரிமையோடும், பெருமையோடும் செழிக்க வேண்டும் என்பதேயாகும். இது இ.ம.இ.யின் தேசியக் கொள்கை! அதுமட்டுமல்ல; இ.ம.இ. வெறும் இந்துமதத்துக்கு மட்டும் உரிய ஒன்றல்ல! இந்து என்ற சொல் ஆத்திக மனம் படைத்த அனைத்து

மனிதர்களேயும் குறிக்கும் சொல்லாகும். (இந்து, இந்தியம், ஆத்திகன், பத்தன் ... எனும் 48 வகைப் பொருள்படும்). எனவே, உலக முதல் மதமான இந்துமதத்துக்கு மற்றைய மதங்கள் விரோதிகளோ, எதிரிகளோ அல்ல. இந்த உண்மையை அனேவரும் புரிந்து உணர்ந்து இ.ம.இ.யின் செயல் திட்டங்களே நிறைவேற்றப் பாடுபட வேண்டும்.

நமது இயக்கம் இந்தியாவிலுள்ள எண்ணற்ற அமைப்புகள், மன்றங்கள், கட்சிகள், சங்கங்கள் ... ... இவற்றிற்கிடையில் தனது நீண்ட நெடிய பயணத்தைத் துவக்கியுள்ளது. ஆனுல், இதனுடைய கொள்கைகள் திட்ட வட்டமாக வரையறுக்கப்பட்டு ஏற்கனவே உலகெங்கும் செயல்படுத்தப்பட்டு மீண்டும் இம்மக்களிடையே செயல்படுத்தப்பட உள்ளன. இதனுடைய கொள்கைகள் ஆக்கப் பூர்வமானவை! உண்மையானவை! நன்மையானவை! எல்லோராலும் விரும்பி ஏற்கக் கூடியவை! அனேவராலும் ஆதரிக்கக் கூடியவை! அன்ருட நடைமுறை வாழ்க்கைக்கு பயன் நல்கக் கூடியவை! பகுத்தறிவுள்ள தத்துவங்கள் ஏற்கக் கூடியவை! இவ்வியக்கம், தான்தோன்றித் தனமாகவோ, வறட்டுப் பிடிவாதமாகவோ, சர்வாதிகாரமாகவோ செயல்படாது! செயல்படாது!! செயல்படாது!!! செயல்படவே செயல்படாது! காலத்துக்கேற்ற முறையில் மாறிவரும் அறிவியல் உண்மைகளுக்கு ஏற்ற முறையில் உண்மைகளே அப்படியே ஏற்றுக்கொண்டு, ஒப்புக் கொண்டு தன்னேத் திருத்திக் கொள்ளும் மனப்பாங்கு உள்ளது. ஏனெனில், மார்க்சீய சிந்தனேயாளனுல், மாபெரும் அனுபவவாதியால் தயாரிக்கப்பட்ட நமது குருதேவர் தமது வாழ்க்கையையே 'தெய்வீகச் சோதனே'யாக்கி (The test of Divinity) வாழ்ந்து வருவதால்தான் இப்போக்கினே நமது இயக்கம் கொண்டுள்ளது. அல்லும் பகலும் இந்திய சமுதாய மறுமலர்ச்சிக்காக அவரின் ஓயாத சிந்தனேகள் எழுத்தாகி, கட்டுரையாகி, அச்சுக்கோர்க்கப்படாமல் கோப்புகளில் (Files) முடங்கிக் கிடக்கின்றன. இவ்வுலகைப் பற்றிய அரிய வரலாற்று உண்மைகள், தமிழ் இலக்கிய வரலாறுகள், அருட்துறை உண்மைகள் ... போன்ற எண்ணற்ற வரலாற்றுப் பேருண்மைகள் வெளிவராமலேயே இருட்டறைக்குள் பூட்டிய செல்வமாகவே உள்ளன. அது மட்டுமல்லாது தனது வாழ்க்கையில் அடைந்த அருளுலக அறிவுலக அநுபவங்கள் ஏராளம்! ஏராளம்!! ஏராளம்!!! இவைகள் எல்லாம் அச்சாகி மனித சமுதாயத்தில் உலவி வந்தால் அடையப்போகும் 'மறுமலர்ச்சி' தான் ஒரு நீடித்த தன்மானமுள்ள உரிமைகள் பெற்ற சமுதாயத்தை நல்கும்.

இதன் முதன் வடிவாகத்தன் ஆங்காங்கே பெரும்பாலும் இளைஞர்களை தேர்ந்தெடுத்து அருட்கலைகளில் தேர்ச்சியுற வைத்து அருட்பணிகளை ஆற்ற வைத்து வருகின்றார் நமது குருதேவர். அதற்காக தாராளமாக 48 வகைப்பட்ட அருட்பட்டங்களில் அவரவர்க்குரிய பட்டங்களை வழங்கி அருளாளர்களாக்கி (Divine Recognition) அவர்கள் மூலம் எண்ணற்ற மக்களுக்கு அறிவியலால் தீர்க்க முடியாத வாழ்வியல் சிக்கல்களேத் தீர்த்து வைத்து வருகின்ருர். அதற்காக ஆங்காங்கே அருளாளர்களின் தலேமையில் அருள் நிலேயங்களே அமைத்துள்ளார். மேலும் பட்டி தொட்டிகளெல்லாம் இப்பணி பரவிட அனேத்து அருளாளர்களும் ஒன்றிணேந்து பாடுபட வேண்டும்.

இவ்வியக்கத்தின் மாபெரும் பிரிவாகத்தான், அடிப்படைக் கால்கோளாகத்தான் 'அருட்பணி விரிவாக்கத் திட்டம்' எனும் அருட்துறை செயல்படுகின்றது. ஆங்காங்கே பயிற்சி பெற்ற அடியான்கள் மூலம் பொது இடங்களில் யாகம் வளர்த்து, வேள்விகள் நடத்தி அருளே அநுபவப் பொருளாக மக்களுக்கு வழங்கி வருகின்றனர். இந்துமதத் தத்துவங்கள், செயல்பாடுகள், முறைகள் யாவும் படிப்படியாகத் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழில் உள்ள அருட்கலேகள் யாவும் முறையானவர்களுக்கும், முழுமையானவர்களுக்கும், தகுதியானவர்களுக்கும் கற்பிக்கப்பட்டு வருகின்றன. ஆங்காங்கே அருட்சத்திக் கோட்டங்கள், வெட்டவெளிக் கருவறைகள், சத்தி பீடங்கள், நவக்கிரக (ஒன்பது கோள்கள்) பரிகார யாக மேடைகள்,

சுடலைப்பூசைகள்... மத வேறுபாடின்றித் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மதத்துறையால் வளர்க்கப்பட்டு வரும் போலி மரபுகள், தேவையற்ற சடங்குகள், ஆரவாரமானப் போக்குகள், வீணான முறைகள்... யாவும் தூக்கியெறியப் பட்டு நேரிய முறையில், நிறைவான முறையில் சித்தர் நெறி உண்மைகள் மக்களை அடைய வழிவகை செய்யப்படுகின்றன. சித்தர் நெறி வளர்வதன் மூலம்தான் உண்மையான, தனிமனிதர் செம்மை, குடும்ப வடிவமைப்பின் வளம், சமுதாய அமைப்பில் நன்மைதரும் பொலிவு நிகழ இயலும். இந்நெறி பரவுவதன் மூலம்தான் தமிழக மக்களிடையே ஒருமைப்பாடும் செழித்தோங்கும். சித்தர் நெறி செழித்தோங்குவதின் மூலம்தான் மொழியின், இனத்தின் பெயரால் வளர்க்கப்பட்டு வரும் சர்வாதிகாரத்தை, சுரண்டலை, ஏமாற்றுக்களை, அறியாமைகளை, அவலங்களை, உரிமையற்ற நிலைகளை, குறுகிய வெறிகளை நீக்க இயலும். சித்தர் நெறி மலர்ச்சியடைவதின் மூலம்தான் ஆத்திக மனம் கொண்டோர் மதிக்கப்பட்டு சமுதாயத்தில் ‘மக்கள் தொண்டே மகேசன் தொண்டு’, ‘ஏழையின் சிரிப்பில் இறைவன்’ என்கின்ற உண்மைகள் உண்மைகளாகும்.

அதுமட்டுமல்ல; ஆரவாரத்திற்காகவும், புகழுக்காகவும், பதவிக்காகவும் பேசப்பட்டு வரும் ‘புதுமைச் சமுதாயம்’, ‘புரட்சிச் சமுதாயமான பெண்களுக்கு சம உரிமை’, ‘கள்ளச்சந்தையை ஒழித்தல்’, ‘சுரண்டலை நீக்கல்’, ‘ஏழைப்பணக்காரனைப் போக்கல்’, ‘கல்வியைச் சீர்திருத்தல்’, ‘சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதிருத்தல்’, ‘தொழுநோயைப் போக்கல்’, ‘பிச்சைக்காரரை ஒழித்தல்’, ‘வேலையில்லாத் திண்டாட்டம் ஒழித்தல்’ ... ... என்ற எண்ணற்ற மறுமலர்ச்சிப் பணிகள் திட்டமிட்டபடி செயல்படுத்தி வெற்றி காணக்கூடிய தரம், திறம், உரம், வீரம், தீரம் மிக்க ஓர் அமைப்பு உண்மையிலேயே உண்டென்றால் அது நமது இயக்கம்தான். இந்த உணர்வை இந்து மதத்தினர் அனைவரும் முதலில் பெற்றாக வேண்டும். ஏனெனில், நம்மை வழி நடத்திச் செல்பவர்கள் தாத்தாக்கள் ஆத்தாக்கள்தான். நாம் ஆண்டவன் பெயரால் செல்கின்றோம். எனவே, நமக்கு வழியாக வழிகாட்டியாக, வழித்துணையாக ஆண்டவனைத்தான் அழைக்கின்றோம். எனவே, நம்மவர்கள் சமயப்பணியே சமுதாயப் பணியாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

நம் நோக்கம் மீச்சிறு நோக்கமல்ல; மாபெரும் நோக்கம். சிற்றோடையல்ல; பொங்கிவரும் புனலாறு தீட்டப்பட்டப் பாதையல்ல; கற்களும் முட்களும் நிறைந்த பாதை; எனவே நாமனைவரும் குருதேவரின் எண்ணத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொள்வோமானால், ஒற்றுமையுடனும், கட்டுப்பாட்டுடனும், நிர்வாகக் கட்டமைப்புடனும் செயலாற்றல் வேண்டும். இந்த நிறுவன நிர்வாக ஒழுங்கமைப்பு இல்லாத காரணத்தினால்தான் இந்து மதம் பலத்த கேலிகளுக்கும், கிண்டல்களுக்கும், மடமைகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், அறியாமைகளுக்கும், ஆடம்பரத்திற்கும், பொருளற்றச் சடங்குகளுக்கும், முதலாளித்துவத்துக்கும், சுரண்டலுக்கும் ... நலிந்து மெலிந்து உரிமையிழந்து வாழவேண்டிய ஒன்றாக மாறிவிட்டது. இந்த அழிநிலை, இழிநிலை, பழிநிலை, ஒழிநிலை விட்டகன்று மனித சமுதாயத்தை இந்துமதம் தலைமை தாங்கி இட்டுச் செல்லும், நடத்திச் செல்லும் தனித்தன்மையைப் பெற வேண்டுமானால் நம் போன்ற அருளாளர்களின் அயராத, ஒழியாத, தளராத, குன்றாத ஆர்வம் மாறாத சித்தர் நெறி வளர்க்கும் மாபெரும் பணியால் மட்டுமே இயலும்.

மேற்கூறிய கருத்துக்களையெல்லாம் உள்ளீடாகக் கொண்டுதான் மாற்று வடிவில் மதச்சீர்திருத்தம் செய்தார் பகுத்தறிவுப் பகலவன் சிறைக்கஞ்சாச் சிங்கம் வெண்தாடி வேந்தர் சிந்தனைச் சிற்பி சீர்திருத்தவாதி பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள். இந்துமதம் வளர்க்கத் தவறிய சித்தர் நெறியின் தத்துவமான சமத்துவக் கொள்கையைத்தான் நவநாத சித்தரான ‘காரல் மார்க்சு’ அவர்கள் கூறிச் செயல்படுத்தினார். இவர்களால் முடித்து வைக்கப்படாத தத்துவங்களைச் செயலாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள இ.ம.இ. யின் அரிய முயற்சிதான் இவ்வறிக்கை!

இம்முயற்சி தலைமைப் பொறுப்பகத்தால் மதுரையில் நடைபெற்ற முதலாம் செயற்குழு மாநாட்டில் (25-12-83) கொண்டுவரப்பட்டத் தீர்மானங்களில் ஒன்றுன 'இயக்கத்திற்கு வார ஏடு தேவை' என்பதை உடனடியாக ஏற்றுக் கொள்ளப்பட்டதன் காரணமாக உருவானதாகும்; உடனே வெளிக்கொணரப் போதிய நிதி வசதியும், அரசுப் பதிவும் தேவையென்பதால் உடனே வெளிவரவில்லை. ஆயினும், நம்மவர்கள் இயக்க நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறியும் வகையில் இந்த அறிக்கையை நண்பர்களின் பொருளுதவியின் மூலம் அச்சிட்டு வழங்குகின்றேம்.

இதன் மூலம் இயக்க முறைகள் பூசை முறைகள், குருதேவரின் அருட்பணிகள், அருட்பயணங்கள், அ.வி.தி. நிலையங்கள் ... ... இவற்றை அறிந்து கொள்ள இயலும். இவ்வறிக்கை மாதம் இருமுறை வெளிவரும். பின்னர் இதற்கு சித்தரடியார் திருக்கூட்டங்களின் ஆர்வமும் ஒத்துழைப்பும் கண்டு வார இதழாக வெளிக் கொணர முயலுவோம்.

அச்சிட்ட இவ்வறிக்கையை வீணுக்காமல் அனைவரும் அனைத்து நண்பர்களிடமும், அன்பர்களிடமும், ஆதரவாளர்களிடமும், ஆர்வலர்களிடமும், விருப்பாளர்களிடமும், இருப்பாளர்களிடமும் அறிமுகப்படுத்தி ஆண்டுச் சந்தாவாக ரூ 12/- அல்லது ஆறுமாதச் சந்தாவாக ரூ 6/- திரட்டி தலைமையகத்திற்கு அனுப்பினுல் விரைவில் தேவையான நிதிவசதி பெற்று வார இதழாக வெளிவரும். குறைந்தது ஒருவர் இருபது நபர்களிடமிருந்து ஆண்டுச் சந்தாவைப் பெற்று அனுப்பிடல் வேண்டும். ஏற்கனவே குருதேவரின் கட்டுரைகளை, அஞ்சல்களை, உரைகளை நகலெடுப்பதின் மூலம் நாம் கருத்துப் புரட்சியைச் செய்து வருகின்றேம். இவ்வறிக்கையை அனைவரிடமும் தருவதே குருதேவரின் எண்ணச் சிறகுகளை நீலவானில் வெண்புறாவைப் பறக்க விட்டதற்கு ஒப்பாக மாறிடும்.

தைத் திருநாளில் இ.ம.இ.யின் சார்பில் வெளிவரும் இவ்வறிக்கை தொடர்ந்து வெளிவந்து தமிழ் கூறும் நல்லுலகை வளமடையச் செய்யும்! வலிவடையச் செய்யும்! பொலிவுறச் செய்யும்! தமிழ் மொழிக்கும், தமிழினத்துக்கும், தமிழ்நாட்டுக்கும் தன்னம்பிக்கையையும், உரிமையையும், பெருமையையும், கட்டுப் கோப்பையும் மீட்டுத் தரும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

இவண்

சி.கவிக்குமார்
தலைமைப் பொறுப்பாளர் (இ.ம.இ., அ.வி.தி.)

---

இதில் சேர்க்காமல் விடப்பட்ட கட்டுரைகள்:

1. நான்காம் முப்பெரும் விழா செய்திக் குறிப்புக்கள்
2. இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ்ச் செயல்படும் அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலையங்கள்

---